தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம், அவர்கள் முன்பாக

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051809

1. District மாவட்டம் : இராமநாதபுரம் PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 5/2021 Date நாள் : 01-10-2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) Sections பிரிவுகள்: 7 ஊழல் தடுப்பு (திருத்தம்)
   (ii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்: சட்டம் 2018
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30-09-2021 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 Hrs Time to : நேரம் வரை 23.45 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01-10-2021 Time : நேரம் 01.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. என். சண்முகசுந்தர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட திணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாளில் இணைப்பு

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சுலவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சுலவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

1) திரு.சு.இளங்கோவன், வயது 50/2021 த/பெ சுவாமிநாதன், சார்பதிவாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) திரு.ப.அன்புராஜ், வயது 52/2021 த/பெ படப்பான், அலுவலக உதவியாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்

3) திரு.ச.செந்தூர்பாண்டி, வயது 32/2021 த/பெ சந்திரன், இளநிலை உதவியாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

4) திரு.ரா.பாலசுப்பிரமணியன், வயது 53/2021 த/பெ ராமநாதன், கதவு எண் 13/2, முத்துராமலிங்க சுவாமி கோவில், தெற்குத் தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்

சமர்ப்பிக்கிறேன் – இன்று 01.10.2021 ஆம்தேதி காலை 01.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.என்.சண்முகசுந்தர், நிலையம் ஆஜராகி 30.09.2021 அன்று இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய இணை திடீர் சோதனை சம்பந்தமான செயல்முறை நடவடிக்கைகள் 30.09.2021 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.நிமலேந்திரன் Rank காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
காவல் துணை கண்காணிப்பாளர்
லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
இராமநாதபுரம்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01-10-2021 at 03.00 Hrs.

Name: பெயர் உன்னி கிருஷ்ணன். S.
Rank: நிலை கா.து.கா...... No. லஞ்ச ஒ.த.க.பிரிவு.
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 5/2021 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம்) 2018 ன் தொடர்ச்சி:

கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூபாய் 96,400/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 5/2021 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு. அனுப்புநர் திரு.என்.சண்முகசுந்தர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம், ந.க.எண.47472/I 2/2021, நாள் : 01.10.2021, அய்யா, பொருள் : இணை திடீர் சோதனை - 30.09.2021 ஆம்தேதியன்று வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் - இணை திடீர் சோதனை நடத்தப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தொடர்பாக, பார்வை: எனது செயல்முறை நடவடிக்கைகள், நாள் 30.09.2021 தாங்கள் 30.09.2021 ஆம்தேதி வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் பணம் பெற்றுக் கொண்டு பத்திரம் பதிவு செய்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக அவ்விடத்திற்கு சென்று சோதனை செய்யவேண்டுமென்றும், இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான என்னை அழைத்ததின் பேரில், நான் அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் தங்கள் அலுவலகம் வந்து தங்களை சந்தித்து, பின்பு தங்கள் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மாலை சுமார் 5.30 மணிக்கு வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகம் வந்து 30.09.2021 ஆம்தேதி இரவு 11.45 மணி வரை தாங்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் இணை திடீர் சோதனை மேற்கொண்டேன். மேற்படி சோதனையின் போது வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.சு.இளங்கோவன், சார்பதிவாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய தான் கடந்த 10.07.2020 ஆம்தேதி முதல் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் இன்று மாலை சுமார் 06.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து எங்களை அறிமுகம் செய்து கொண்ட பின்னர்

மேற்படி அலுவலகத்தை திடீர் இணை சோதனையின் போது சார்பதிவாளரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 2,700/– வைத்திருந்ததாகவும், அது பற்றி அவரிடம் கேட்க ரூபாய் 200/– தனது அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், மீதமுள்ள பணம் ரூபாய் 2,500/– தனது வீட்டிற்கு அரிசி வாங்குவதற்காக தனியாக வைத்திருந்தாகவும் கூறினார். மேலும் தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததிருந்த பணம் ரூபாய் 200/– திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கூடுதலாக வைத்திருந்த பணம் பற்றிய சரியான முகாந்திரம் இல்லாத காரணத்தினால் அப்பணம் ரூபாய் 2,500/–சார்பதிவாளரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பத்திரப்பதிவு செய்வதறகான தொகை அனைததும் இ.பேமெணட் மூலம் வசூல் செய்வது வழக்கம். இன்று மேற்படி அலுவலகத்தில் கிரையப் பத்திரம்–17, உரிமை ஆவணம் ஒப்படைப்பு – 3, அடமானப் பத்திரம்–3, பவர் பத்திரம்–3, பாகப்பிரிவினை பத்திரம்–1, அடமானம் ரசீது (திருப்புவது)–1 ஆக மொத்தம் 28 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அலுவலகததில பராமரிக்கபபடும் 29.09.2021 முதல் தொகுதி எண்.23 H பதிவேட்டில் அலுவலக நிரந்தர கையிருப்பு பணம் ரூபாய் 250/–யும், கொடிக்காசு வசூல் பணம் ரூபாய் 9,000/–யும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்தப்பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சரியாக இருந்தது. மேலும் நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான பணியாளர்களின் தனி நபர் கையிருப்பு பதிவேடு, 2) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் 2021 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, 3) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 30.09.2021 அன்று பதியப்பட்ட ஆவணத்தின் "அ" கணக்கு நகல், 4) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான தகவல் தொகுப்பு பதிவேடு, 5) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான பகரான்மை வருகைப் பதிவேடு ஆகியவை ஆஜர்படுத்த கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ப.அன்புராஜ், த/பெ படப்பான், அலுவலக உதவியாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரணை செய்ய தான் கடந்த 11.07.2019 ஆம் தேதி முதல் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது, பத்திரப் பதிவு செய்ய வருபவர்களிடம் பத்திரத்தில் கையொப்பம் பெற்று அதில் முத்திரையிட்டு அதனை சார்பதிவாளரின் பார்வைக்கு உட்படுத்துவது மற்றும் அலுவலக பதிவறையையும் தான்

கவனித்து வருவதாகவும், தான் இன்று மாலை சுமார் 06.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து தங்களை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும், அப்போது தான் பதட்டத்தில் தனது சட்டைப் பையில் வைத்திருந்த பணம் ரூபாய் 3,700/– ஐ எடுத்து பக்கத்தில் இருந்த டேபிளுக்கு அடியில் போட்டதை அவரை விசாரிக்கும்போது எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி கேட்க தனது மகளின் பள்ளிக் கட்டணம் செலுத்த வேண்டி வைத்திருந்ததாக கூறினார். அந்தப் பணம் பற்றி சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேலும், பணம் ரூபாய் 3,700/– பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலக பதிவறையின் வாசலுக்கு கிழக்குப் பக்கம் மேற்கு நோக்கி இருந்த இருப்பு பீரோவில் மேல் தட்டில் பணம் ரூபாய் 3,000/– இருந்தது பற்றி கேட்க அதற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் அப்பணம் ரூபாய் 3,000/–மும் ஆக மொத்தம் ரூபாய் 6,700/– கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திருமதி.எஸ்.பெத்து லெட்சுமி, க/பெ நவரத்தினம், உதவியாளர், அபிராமம் சார்பதிவகம், அபிராமம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிக்க தான் அபிராமம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து தற்போது 22.09.2021 முதல் இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பகரான்மை பணியில் (அயல்பணி) பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது, சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்படும் தபால்களை தன் பதிவேட்டில் பதிவு செய்வது, திருமணப் பதிவு ஆவணங்களை சரிபார்ப்பது, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை சரிபார்ப்பது ஆகும் என்றும், இன்று 30.09.2021 ஆம்தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் தான் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும், அப்போது தனது கைப்பையில் ரூபாய் 1,500/– வைத்திருந்ததை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததாகவும், கூறியதால் அப்பணம் ரூபாய் 1,500/– திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம்

பதிவு செய்யப்பட்டது. திருமதி.வெ.துர்கா, க/பெ வெங்கடேசன், தினசரி தகவல் தொகுப்பு அலுவலர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிகக தான் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவகத்தில் தினசரி தகவல் தொகுப்பு அலுவலராக (தொகுப்பூதியத்தில்) கடந்த 2 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது, அலுவலகத்தில் பதியப்படும் பத்திரங்களை கணினியில் ஸ்கேன் செய்வது ஆகும் என்றும், இன்று 30.09.2021 ஆம்தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் தான் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சாரபதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும், அப்போது தனது கைப்பையில் ரூபாய் 260/- வைத்திருந்தாகவும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும் கூறினார். அந்தப்பணம் பற்றி கேட்க தனது கைச்செலவிற்காக வைத்திருந்ததாக சொன்னதால் அப்பணம் ரூபாய் 260/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ச.செந்தூர்பாண்டி, த/பெ சந்திரன், இளநிலை உதவியாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிகக தான் கடந்த 26.06.2019 ஆம் தேதி முதல் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது பணியானது, பத்திரப்பதிவு செய்ய வருபவர்களை கணினி மூலம் போட்டோ எடுப்பது, அலுவலக பணியாளர்களின் சம்பள பில் போடுவது, வில்லங்க சான்று எடுப்பது ஆகும் என்றும், தான் இன்று 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சாரபதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்து கொண்டிருந்தபோது தான் கணினி அறைக்கு சென்று திரும்பி வந்ததை பார்த்து தன்னை விசாரித்து கணினி அறைக்கு அழைத்துச் சென்று மேற்படி அறையை சோதனை செய்ய அதில் வடக்கு பக்கமாக உள்ள மர ரேக்கில் கோப்புகளுக்கு இடையில் சி.டி. வைக்கக்கூடிய காக்கி கவரில் ரூபாய் 16,000/- இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி பணம் ரூபாய் 16,000/- பற்றி கேட்க அப்பணம் சார்பதிவாளர் திரு.இளங்கோவன் அவர்கள் இன்று மாலை சுமார்

05.00 மணியளவில் தன்னிடம் கொடுத்து அலுவலக நேரம் முடிந்து வீட்டிற்கு போகும்போது வாங்கிக் கொள்வதாக கூறியதாகவும், தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் ரூபாய் 210/– பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். மேலும், அவரை சோதனை செய்ய அவரது சட்டைப் பையில் இருந்த ரூபாய் 100/– இருப்பதாகவும், மீதமுள்ள ரூபாய் 110/– மதிய உணவிற்கு செலவு செய்ததாகவும் கூறினார். ஆகவே, மீதமுள்ள ரூபாய் 100/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் சார்பதிவாளர் திரு.இளங்கோவன் வைத்திருக்கச் சொல்லி அவரிடம் காக்கி கவரில் கொடுத்து வைத்திருந்த பணம் ரூபாய் 16,000/– கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ந.அழகர்சாமி, த/பெ நவநீதகிருஷ்ணன், கேமரா ஆப்ரேட்டர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிகக தான் கடந்த 01.02.2019 ஆம் தேதி முதல் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆப்ரேட்டராக காண்ட்ராக்ட் முறையில் பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு மாதச் சம்பளமாக ரூபாய் 8,430/– கம்பெனி மூலம் வழங்கப்படுவதாகவும், தனது பணியானது அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்ய வருபவர்களை ஆவண பதிவு முடியும் வரை சி.சி.டி.வி.யில் பதிவாகும் நிகழ்வுகளை குறுந்தகட்டில் பதிவேற்றம் செய்வது ஆகும் என்றும், தான் இன்று 30.09.2021 ஆம்தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும், இன்று அலுவலக தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும், அவரை சோதனை செய்ய அவர் தனது சட்டைப் பையில் ரூபாய் 2,030/– வைத்திருந்ததாகவும், மேற்படி பணம் பற்றி கேட்க, மளிகைப் பொருட்கள் வாங்கவும் மற்றும் பெட்ரோல் போடுவதற்கும் வைத்திருந்ததாகச் சொன்னது தகுந்த முகாந்திரம் என தெரிய வந்ததால் அப்பணம் ரூபாய் 2,030/– திரும்ப என்னிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ப.முத்து பாலகுமரன், த/பெ பழனியப்பன், தகவல் தொழில் நுட்ப பணியாளர், வெளிப்பட்டிணம் சார்பதிவகம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிக்க தான் கடந்த 01.02.2019 ஆம்தேதி முதல் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்ப பணியாளராக காண்ட்ராக்ட் முறையில் பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு

மாதச் சம்பளமாக ரூபாய் 5,523/- கம்பெனி மூலம் வழங்கப்படுகிறது என்றும், தனது பணியானது, பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் பத்திரங்களை கணினி மூலம் ஸ்கேன் செய்வது ஆகும் என்றும், தான் இன்று 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார வெளிப்பட்டிணம் சார்பதிவாளர அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர இணை சோதனை செய்ததாகவும், இன்று அலுவலக தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் ரூபாய் 100/- பதிவு செய்திருந்ததாகவும், அவரை சோதனை செய்ய அவர் தனது சட்டைப் பையில் ரூபாய் 100/- வைத்திருந்த பணம் பற்றி கேட்க, தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அப்பணம் திரும்ப அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.மு.கோபு, த/பெ முருகேசன், கதவு எண் 3/303, தூரங்காட்டு வலசை, கடுக்காவலசை, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரணை செய்ய தான் கடல் தொழில் செய்து வருவதாகவும் ஓய்வு நேரங்களில் பத்திரம் போடுவது தொடர்பாக பத்திர எழுத்தர் கதிரேசன் அவர்களை சந்தித்து பத்திரம் பதிவு செய்பவர்களுக்கு உதவி செய்வேன் எனவும், தான் இன்று 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் பத்திர எழுத்தர் திரு.கதிரேசன் அவர்களை சந்திக்க வந்தபோது அவர் ஆவண எண் 829/1988 னை கொடுத்து அதன் மதிப்பை சார்பதிவாளரிடம் கேட்டு வரச் சொன்னதாகவும் அதன்பேரில் தான் சுமார் 5.45 மணியளவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும் அப்போது அங்கிருந்த அவரையும் விசாரணை செய்ய அவர் தனது கால்சட்டையில் வைத்திருந்த ரூபாய் 1,200/- எடுத்து ஆஜர் செய்ததாகவும் அப்பணம் பற்றி கேட்க வீட்டிற்கு பலசரக்கு சாமான்கள் வாங்க வைத்திருந்ததாக சொன்னதற்கு தகுந்த முகாந்திரம் தெரிய வந்ததால் அப்பணம் ரூபாய் 1,200/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த ஆவண எண் 829/1988ன் நகலை விசாரணைக்காக ஒப்படைக்கச் சொன்னதின் பேரில் ஒப்படைத்தார். இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.கோ.கிஷோர் த/பெ கோவிந்தராஜ், கதவு எண் 2/7, மாயாபுரம், மேலக்கோட்டை அஞ்சல்,

இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிக்க தான் பத்திர எழுத்தர் திரு.இராஜசேகர் அவர்களுக்கு உதவியாளராக கடந்த 3 வருடங்களாக வேலை பார்த்து வருவதாகவும் தான் இன்று 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 05.50 மணியளவில் பத்திர எழுத்தர் திரு.இராஜசேகர் அவர்கள் வெளிப்பட்டிணம் ஆவண எண் 3678/2021 ஐ சார்பதிவாளர் அவர்களிடம் கொடுத்து வரச்சொன்னதாகவும் அதன்பேரில் தான் அதனை எடுத்து சார்பதிவாளரிடம் கொடுப்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தபோது இருந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார வெளிப்பட்டிணம் சாரபதிவாளர அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் சாரபதிவாளர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்ததாகவும் அப்போது அங்கிருந்த அவரை விசாரணை செய்ய தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 5,700/- எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க தனது அப்பாவிற்கு மருத்துவ செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னதால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.செ.ஜெயபால் த/பெ செல்லச்சாமி, கதவு எண் 7/50, முதுனாள் கிராமம், தூரங்கோட்டை அஞ்சல், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரணை செய்ய தான் இராமநாதபுரத்தைச் சேர்ந்த ரியல் ஸ்டேட் தொழில் செய்யும் பழனியப்பன் என்பவரிடம் உதவியாளராக வேலை பார்த்து வருவதாகவும் தான் இன்று 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 05.35 மணியளவில் இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்படி பழனியப்பன் இன்று கிரைய ஆவணம் பதிவு எண் 6119/2021 பதிவு செய்ததை திரும்ப பெறுவதற்காக வந்தபோது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சாரபதிவாளர அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்ட பின்னர் அலுவலகத்தை திடீர் இணை சோதனை செய்தார்கள். அப்போது அங்கிருந்த அவரையும் விசாரணை செய்ய தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 610/- எடுத்து ஆஜர் செய்தேன் என்றும் அப்பணம் பற்றி கேட்க ஜெராக்ஸ் எடுக்க மற்றும் பெட்ரோல் போடுவதற்காக வைத்திருந்ததாக சொன்னதால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ரா.பாலசுப்பிரமணியன் த/பெ ராமநாதன், கதவு எண் 13/2, முத்துராமலிங்க சுவாமி கோவில், தெற்குத் தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை விசாரிக்க தான் எட்டிவயல் அருகில் உள்ள

தரணி இயற்கை விவசாய பண்ணையில் மேலாளராகவும், ரியல் ஸ்டேட் வேலையும் பார்த்து வருவதாகவும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல பத்திரபதிவு அலுவலகங்களில் தனது ஏற்பாட்டில் நிலம் வாங்கி விற்கும் தொழிலில் பத்திரப்பதிவு செய்து வருவதால் சார்பதிவாளர் அவர்களுக்கும் தனக்கும் நல்ல பழக்கம் உள்ளது எனவும் அதே போல் தனது வீடு வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது எனவும் ஆகவே தான் அதிகமாக வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து வருவது வழக்கம் என்றும் இந்நிலையில் இன்று 30.09.2021 ஆம் தேதி இதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு சார்பதிவாளருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டிய நிலையில் அதற்கும் இன்று தனது ஏற்பாட்டின் பேரில் பதிவு செய்யப்பட்ட ஜெயராமன், சித்திரை வேலு மற்றும் முனியசாமி ஆகியோர்களுக்கான பாகப் பிரிவினை பத்திரத்திற்கும் சேர்த்து வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் திரு.இளங்கோவன் அவர்களுக்கு லஞ்சமாக ரூபாய் 70,000/- கொடுக்க வேண்டியிருந்ததால் அப்பணத்துடன் தனது தாய்மாமன் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த குருசாமிக்கு சொந்தமான ஒரு ஏக்கர், 40 சென்ட் நிலத்தை ரூபாய் 7,70,000/-க்கு கீழக்கரையைச் சேர்ந்த ஒரு நபருக்கு இராமநாதபுரம் பெரியார் நகரைச் சேர்ந்த தெய்வசிலை என்பவரின் ஏற்பாட்டின் பேரில் போகலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து இன்று விற்றுவிட்டு தனது தாய் மாமனுக்கு ரூபாய் 3,70,000/- கொடுத்துவிட்டு மீதமுள்ள பணம் ரூபாய் 4,00,000/-மும் தனது கைசெலவுக்காக வைத்திருந்த பணம் ரூபாய் 2,570/-மும் மற்றும் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் இளங்கோவன் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.70,000/-த்துடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்ததாகவும் அப்போது இராமநாதபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அறிமுகம் செய்து கொண்டு திடீர்இணை சோதனை செய்த போது அங்கிருந்த தன்னையும் விசாரணை செய்ய மேற்படி விபரத்தை சொன்னேன் எனவும் அதில் ரூபாய் 4,00,000/-மும், செலவிற்காக வைத்திருந்த பணம் ரூபாய் 2,570/-மும் திரும்ப தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மேலும் சார்பதிவாளர் திரு.இளங்கோவன் அவர்களுக்கு கொடுக்க வேண்டி வைத்திருந்த பணம் ரூபாய் 70,000/-த்தை கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் வடமேற்கு மூலையில் உள்ள மேஜை மீது இருந்த கருப்பு நிற காலேஜ் பேக்கை சோதனை செய்ய அதில் பணம் ரூபாய் 1,200/- இருந்தது

கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி கருப்பு நிற காலேஜ் பேக் பற்றி சார்பதிவாளரிடம் விசாரிக்க அது திரு.முகமது நவாஸ்கான்(ஸ்கேனர்) எனவும் அவர் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்யும் பணி செய்து வருவதாகவும் இன்று காலை அலுவலகத்திற்கு வந்து வருகைப்பதிவேட்டில் கையெழுத்திட்டு பின்பு யாரிடமும் எதுவும் சொல்லாமல் வெளியே சென்றவர் இது வரை அலுவலகத்திற்கு திரும்பி வரவில்லை ஆகையால் மேற்படி பணம் ரூ.1,200/– கைப்பற்றப்பட்டது. மேலும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான பணியாளர்களின் தனி நபர் கையிருப்பு பதிவேடு, 2) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்களின் 2021 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, 3) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 30.09.2021 அன்று பதியப்பட்ட ஆவணத்தின் "அ" கணக்கு நகல், 4) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான தகவல் தொகுப்பு பதிவேடு, 5) வெளிப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டிற்கான பகரான்மை வருகைப் பதிவேடு ஆகியவை ஆஜர்படுத்த கைப்பற்றப்பட்டது. மேற்படி இணை திடீர் சோதனையின் போது கணக்கு சொல்ல இயலாத பணம் மொத்த ரூபாய் 96,400/– கைப்பற்றப்பட்டது. மேற்படி இணை திடீர் சோதனை இன்று 30.09.2021 ஆம்தேதி இரவு 11.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இணை திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சரியாக கணக்கு சொல்ல இயலாத மொத்த பணம் ரூபாய் 96,400/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், இணை திடீர் சோதனை சம்மந்தமான எனது நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை இன்று தங்களிடம் ஒப்படைத்தமைக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒப்பம் (என்.சண்முகசுந்தர்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம். Sir, Received this complaint along with enclosure and registered a case in Vigilance and Anti-Corruption, Ramanathapuram Crime No.5/2021 u/s 7 of P.C (Amendment) Act, 2018 on 01.10.2021 at 01.00 hours signed Unnikrishnan.S., DSP, V&AC, Ramanathapuram detachment 01/10/2021 இதன் அசலுடன் சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து இராமநாதபுரம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அவர்களுக்கும் மற்றும் நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2/9/2

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.